இல்லை. இக்காரணங்களுக்காக ஒத்திவைக்கக் கூடாது என்று சட்டப் பேரவை விதிமுறைகள் பொதுவாக எடுத்துக் கூறியிருப்பதனாலும், முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற உறுதி மொழி விளக்கத்தையொட்டியும், இதைப் பற்றி அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவை இல்லை என்று நான் கருதுகிற காரணத்தினால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம் : உண்ணாவிரதம், வேலை நிறுத்தத்திற்காக மட்டுமல்ல இந்த ஒற்றிவைப்புப் பிரச்னை, நடுவர் தீர்ப்பை அரசு மீறியது பற்றியும்தான்.

(3) அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண் 2) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்கு (எண். 2) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண். 9/70) சட்ட மேலவையில் 30-3-1970 அன்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை ஏதும் செய்யப்படவில்லை என்று சட்ட மேலவைத் தலைவரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவையின் 193 (1)-வது விதியின் கீழ், பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:—

1. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
2. மாண்புமிகு முதலமைச்சர்
3. மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர்
4. மாண்புமிகு நிதி அமைச்சர்
5. திரு. து. ப. அழகமுத்து
6. திரு. பி.ஜி. கருத்திருமன்
7. திரு. கே. விநாயகம்
8. திரு. கரு. சீமைச்சாமி
9. திரு. ஏ. பாலசுப்பிரமணியன்
10. திரு. கோ. பூவராகன்
11. திரு. பி. கே. மூக்கையா தேவர்
12. திரு. ஏ. ஆர். மாரிமுத்து

13. திரு. க. ர. நல்லசிவன்
14. திரு. ஆ. கு. சுப்பையா
15. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது
16. திரு. ம. பொ. சிவஞானம்

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவர்.

(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவையின் 201 (1)-வது விதியின்கீழ் 1970–71-க்கு பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்:—

1. திரு. ஜி. ஆர். எட்மண்ட், பேரவைத் துணைத் தலைவர்
2. திரு. இரெ. இளம்வழுதி
3. திரு. எல். கணேசன்
4. திரு. செஞ்சி வெ. முனுசாமி
5. திரு. ஈ. எம். நடராசன்
6. திரு. க. ந. சிவபெருமாள்
7. திரு. கே. ஆர். கோவிந்தன்
8. திரு. ஜே. ஜேம்ஸ்
9. திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி
10. திரு. எம். பூபதி
11. திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்
12. திரு. பி. வேலுசாமி

சட்டப் பேரவையின் 202-வது விதியின் கீழ், திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(ஈ) நடைமுறை விதிக் குழுவிற்கு நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றுமோர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவையின் 229 (1)-வது விதியின்கீழ் 1970–71-க்கு பின்வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:—

1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி, முதலமைச்சர்

2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் கல்வி, சுகாதார அமைச்சர்

3. மாண்புமிகு திரு. செ. மாதவன், தொழில் அமைச்சர்
4. திரு. ஜி. ஆர். எட்மண்ட், பேரவைத் துணைத் தலைவர்
5. திரு. பழனிவேல் ராஜன்
6. திரு. வி. ஆலடி அருணா
7. திரு. பெ. சீனிவாசன்
8. திரு. எம். சி. பாலன்
9. திரு. பி. எஸ். மணியன்
10. திரு. என். எஸ். வி. சித்தன்
11. திரு. க. இராமமூர்த்தி
12. திரு. கரு. சீமைச்சாமி
13. திரு. வி. கே. கோதண்டராமன்
14. திரு. அ. சேனாபதி
15. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
16. திரு. ஆ. கு. சுப்பையா

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவர்.

(4) 1970–71-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

கோரிக்கை எண் 19—கூட்டுறவு

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,08,53,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவரவர்களே, விலைவாசிகள் ஏற்றத்தினால் அவதிப்படும் மக்களுக்கு, மலிவு விலையில் பண்டங்கள் விற்க, கிராமங்கள் தோறும் கூட்டுறவு பண்டகசாலைகள் ஏற்படுத்துவது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,08,53,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன்: தலைவரவர்களே, சந்தானம் கமிட்டி அடிப்படையில், கூட்டுறவுச் சட்டத்தை மாற்றித் திருத்திக் கொண்டு வாராததால் ஊழல் வளர்ந்து போவதைப் பற்றி விவாதிக்க—